புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635
T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

● மலர்: 01 ● இதழ்: 253 ● 19-03-2026 ● வியாழன் ● பக்கம்- 4 ● விலை- ரூ.5 ● திருச்சி- புதுச்சேரி
● Volume 01 ● Issue: 253 ● 19-03-2026 ● Thursday ● Pages - 4 ● Price- Rs. 5 ● Trichy-Puducherry

ஓய்வுபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரியாவிடை!

## "அரசியலில் 'முற்றுப்புள்ளி' என்பதே கிடையாது: பிரதமர் மோடி



புதுடெல்லி: மார்ச்.19–

"அரசியலில் 'முற்றுப்புள்ளி' என்பதே கிடையாது, ஓய்வு பெறுபவர்களின் அனுபவம் சமூகத்திற்கு பயன்படும். மூத்த உறுப்பினர்களிடமிருந்து நாம் கற்பதற்கு ஏராளம் உள்ளது" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் பட்ஜெட் கூட்டத் தொடரின் போது மாநிலங்களவையில் பிரதமர் மோடி உரையாற்றினார். ஓய்வுபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் மோடி பிரியாவிடை அளித்தார்.

இது குறித்து பிரதமர் பேசும்போது, "மாநிலங்களவையில் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதங்கள் நடைபெறுகின்றன; அவற்றில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களது தனித்துவமான பங்கை ஆற்றியுள்ளனர்.

மல்லிகார்ஜுன கார்கே, சரத் பவார், தேவ கவுடா ஆகியோர் தங்கள் வயதில் அதிக நாட்களை பொதுவாழ்விற்கு அர்ப்பணித்துள்ளனர். தங்களின் அனுபவத்தைக் கொண்டு சமுதாயத்திற்கு சேவையாற்ற அடுத்த கட்ட பயணத்தில் அடியெடுத்து வைக்க உள்ளனர். மூத்த உறுப்பினர்களிடமிருந்து நாம் கற்பதற்கு ஏராளம் உள்ளது.

தங்கள் பதவிக்காலம் முடிந்து இம்மன்றத்தை விட்டு விடைபெறும் தலைவர்களிடம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது போன்ற தருணங்களில், கட்சி எல்லைகளைக் கடந்து ஒற்றுமை உணர்வுடன் நாம் ஒன்றிணைகிறோம். அரசியலில் 'முற்றுப்புள்ளி' என்பதே கிடையாது, ஓய்வு பெறுபவர்களின் அனுபவம் சமூகத்திற்கு பயன்படும். எதிர்காலம் உங்களுக்காகக் காத்திருக்கிறது. உங்கள் அனுபவமும், பங்களிப்பும் எப்போதும் நினைவுகூரப்படும்" இவ்வாறு அவர் கூறினார்.

## வாக்காளர் அடையாள அட்டை இல்லையா?
## வாக்களிக்க 12 மாற்று ஆவணங்களை பட்டியலிட்டது தேர்தல் ஆணையம்

சென்னை: மார்ச். 19–

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையம் பட்டியலிட்டுள்ள மாற்று புகைப்படத்துடன் கூடிய 12 ஆவணங்கள் காண்பித்து வாக்களிக்கலாம் என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: நடைபெறவிருக்கின்ற, 2026ம் ஆண்டிற்கான சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது.

அதன்படி, * ஆதார் அட்டை, * மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, * புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், * தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஓட்டுநர் உரிமம், * வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card), * தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை, * இந்திய கடவுச்சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், * மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர் களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், * நாடாளுமன்ற, சட்டமன்ற, சட்டமேலவைஉறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் * இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

வாக்காளர் தகவல் சீட்டு: வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப் பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப் பதிவு நாளுக்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச் சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்தால் மட்டுமே...

அதேவேளையில், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார் என்று தெளிவுபடுத்தப்படுகிறது.

1950ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 20 கின் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச் சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்வாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.

## 'சிலிண்டரை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை; எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்'
### பொதுமக்களுக்கு மத்திய அரசின் இணைச் செயலாளர் அறிவுறுத்தல்

புதுடெல்லி: மார்ச்.19–

சிலிண்டர்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போரால் இந்தியாவில் எரிபொருள் நெருக்கடி கவலைக்குரிய விஷயமாகவே நீடிக்கிறது. எனினும், சமையல் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. அதேநேரம் எரிவாயுவை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மாற்றாக, சமையலுக்கு மின்சாரம் உள்ளிட்ட இதர எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது கூடுதல் நலம் பயக்கும்.

தற்போது எந்தவொரு விநியோகஸ்தரிடமும் கையிருப்பு இல்லாத நிலை ஏற்படவில்லை. வீடுகளுக்கான சிலிண்டர் விநியோகம் வழக்கம் போலவே நடைபெற்று வருகிறது. வணிக ரீதியிலான எல்பிஜி விநியோகம் தொடக்கத்தில் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தாலும், தற்போது பகுதி அளவில் சீரமைக்கப்பட்டுள்ளது. வணிகப் பயன்பாட்டாளர்கள் படிப்படியாகக் குழாய் வழி இயற்கை எரிவாயுவுக்கு மாற வேண்டும்.

எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்குபவர்கள் மற்றும் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களில் நாடு முழுவதும் 12,000க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு சுஜாதா தெரிவித்தார்.

## இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் குஜராத்தை வீழ்த்தி தமிழ்நாடு முதலிடம்:
## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் சாதனை

சென்னை: மார்ச்.19–

தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 'திராவிட மாடல்' அரசுக்கு மகுடம் சூட்டும் விதமாக, 2024 25ம் நிதியாண்டிற்கான இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் அனைத்து மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளி தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடத்தைப் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. தொழில் துறையில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சிறப்பான தொழில் கொள்கைகள், ஜவுளித்துறைக்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகைகள், தடையற்ற மின்சாரம் மற்றும் கட்டமைப்பை மேம்படுத்தியதன் நேரடி விளைவாகவே இந்தச் சாதனை சாத்தியமாகியுள்ளது.

'NIRYAT' தரவுகளின் அடிப்படையில் வெளியாகியுள்ள புள்ளிவிவரங்களின்படி, 2024 25ம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த ஜவுளி ஏற்றுமதி மதிப்பு 7,997.17 மில்லியன் டாலர்களாகப் பதிவாகி, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் நெருங்க முடியாத உச்சத்தைத் தொட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் 20202021ம் ஆண்டில் 6,193.39 மில்லியன் டாலர்களாக மட்டுமே இருந்த தமிழ்நாட்டின் ஜவுளி ஏற்றுமதி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் அபரிமிதமான எழுச்சியைக் கண்டுள்ளது. அரசின் சார்பாக திருப்பூர், கோவை, ஈரோடு உள்ளிட்ட ஜவுளி மையங்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்புச் சலுகைகள் மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்த நடவடிக்கைகளால், ஏற்றுமதி முந்தைய ஆண்டுகளை விட 29 சதவீதம் என்ற பிரம்மாண்ட வளர்ச்சியைப் பதிவு செய்து 7,997.17 மில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.

தொழில் வளர்ச்சியில் தங்களை முன்னணி மாநிலங்களாகக் காட்டிக் கொள்ளும் குஜராத் மற்றும் மகாராஷ்டிராவை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு தனது சிறப்பான செயல்பாடுகளால் வெகுவாகப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.

இப்பட்டியலில், தமிழ்நாடு 7,997.17 மில்லியன் டாலர்கள் (முதலிடம்)

குஜராத் 5,646.01 மில்லியன் டாலர்கள் (இரண்டாம் இடம்)

மகாராஷ்டிரா 3,831.28 மில்லியன் டாலர்கள் (மூன்றாம் இடம்)

உத்தரப் பிரதேசம் 3,679.5 மில்லியன் டாலர்கள் (நான்காம் இடம்) என உள்ளன.

குஜராத்தை விட தமிழ்நாடு சுமார் 2,351 மில்லியன் டாலர்கள் அளவுக்குக் கூடுதலாக ஏற்றுமதி செய்து, இந்தியாவின் ஜவுளித் தலைநகரம் தமிழ்நாடுதான் என்பதை ஆணித்தரமாக நிரூபித்துள்ளது. பிற மாநிலங்களின் நிலையை பொறுத்தவரை மத்தியப் பிரதேசம் (1,324.97), மேற்கு வங்கம் (921.95), ராஜஸ்தான் (855.37) போன்ற மாநிலங்கள் பல மடங்கு பின்தங்கியுள்ளன. தென்னிந்தியாவில் ஆந்திரா (506.42), கேரளா (434.14), தெலங்கானா (111.09) ஆகிய மாநிலங்களை விட தமிழ்நாடு மிகப்பெரிய ஜாம்பவானாகத் திகழ்கிறது. "எளிதான தொழில் தொடங்கும் சூழல்", உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் ஈர்க்கப்பட்ட பல்லாயிரம் கோடி முதலீடுகள், புதிய மினி ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டம் போன்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சீரிய முன்னெடுப்புகளே இந்த மாபெரும் வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளன.

கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து மூலம் சர்வதேச அளவில் கொடிகட்டிப் பறக்கும் தமிழ்நாட்டின் இந்த ஜவுளி ஏற்றுமதிச் சாதனை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்துள்ள '2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம்' என்ற இலக்கை நோக்கித் தமிழ்நாடு அசுர வேகத்தில் முன்னேறி வருவதற்கான மிகச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது எனப் பொருளாதார வல்லுநர்களும், தொழில் துறையினரும் நெஞ்சாரப் பாராட்டி வருகின்றனர்.

## சட்டமன்றத் தேர்தலை ஒட்டி சென்னையில் நகை அடகு கடைகள், திருமண மண்டபங்களுக்கு கட்டுப்பாடுகள்!!

சென்னை : மார்ச்.19–

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் ஒரே கட்டமாக ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ளது. இதையடுத்து தேர்தல் நேரத்தில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதைத் தடுக்கவும், நேர்மையான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யவும், தேர்தல் ஆணையம் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, ஜிபே, ஃபோன்பே உள்ளிட்டவை மூலம் வாக்காளர்களுக்கு பணம் வழங்கப்பட்டால் உடனடியாக தேர்தல் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று வங்கி ஊழியர்களுக்கு சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி நேற்று உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், சட்டமன்றத் தேர்தலை ஒட்டி சென்னையில் நகை அடகு கடைகள், திருமண மண்டபங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி,

*அடகு வைத்த நகைகளை திருப்புவதற்கு அரசியல் கட்சியினருக்கு முறைகேடாக உதவினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

*அடகு வைத்த நகைகளை திருப்ப வாக்காளர்களுக்கு டோக்கன், அடையாள வில்லைகள் வழங்கினால் ஏற்கக் கூடாது.

*மொத்தமாக அடகு வைத்த நகைகளை திருப்ப எவரேனும் முற்பட்டால் தகவல் தர வேண்டும்.

*திருமண மண்டபம், கூட்ட அரங்கில் வெளியூரில் இருந்து கூட்டமாக வந்து தங்க அனுமதி வழங்கக் கூடாது.

*மண்டபத்தில் அரசியல் கூட்டங்கள் நடத்த பதிவு செய்யப்பட்டால் தேர்தல் அலுவலருக்கு தெரியப் படுத்த வேண்டும்.

*புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை நகல்களை பெற்ற பின்னரே விடுதிகளில் தங்க அனுமதிக்க வேண்டும்.

*ஒரு வேட்பாளர் அதிகபட்சம் ரூ.40 லட்சம் வரை மட்டுமே தேர்தல் பணிகளுக்கு செலவிட முடியும். அரசியல் பகுப்பாய்வு

*வேட்பாளரின் செலவுகள் தேர்தல் செலவின கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

## தமிழகத்தில் 3 நாட்களில் உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.42.65 கோடிக்கு பணம், பொருட்கள் பறிமுதல்

சென்னை: மார்ச்.19–

தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினரால் தற்போது வரை ரூ.42.65 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி கடந்த 15ம் தேதி அறிவிக்கப்பட்டது. அன்றில் இருந்தே தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டன.

இதையடுத்து, தமிழகம் முழுவதும் பறக்கும் படையினர் மூலம் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. தற்போது 234 தொகுதிகளிலும், தொகுதிக்கு தலா 9 பறக்கும் படைகள், 9 நிலை கண்காணிப்புக் குழுக்கள் என்ற விகிதத்தில், தமிழகம் முழுவதும் 2,160 பறக்கும் படைகள், 2,160 நிலைக் கண்காணிப்புக் குழுக்கள் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தற்போது நடைபெற்று வரும் தேர்தல் செலவினக் கண்காணிப்பு மற்றும் அமலாக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பல்வேறு பிரிவுகளின் கீழ் அதிகாரிகள் கணிசமான அளவு பொருட்களைப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

(18 மார்ச்) நிலவரப்படி, பறிமுதல் செய்யப்பட்ட மொத்த மதிப்பு ரூ. 42.65 கோடி ஆகும். தமிழகம் முழுவதும் ரூ. 2.37 கோடி ரொக்கமும், ரூ.0.18 கோடி மதிப்பிலான மதுபானம், ரூ. 2.88 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள், ரூ.16.42 கோடி மதிப்பிலான விலைமதிப்பற்ற உலோகங்கள் மற்றும் ரூ.20.80 கோடி மதிப்பிலான இலவசங்கள் / பிற பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் செலவின கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் அமலாக்க முகமைகள், சட்டவிரோதப் பணப் புழக்கம், வாக்காளர்களை கவர வழங்கப்படும் இலவசப் பொருட்கள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருட்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்த கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன" என்று அவர் தெரிவித்துள்ளார்.



திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி பொதுதேர்தல் மேற்பார்வையாளர் சத்திரதார் பாபு ( இ.ஆ.ப.) அவர்கள் மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.இதில் தேர்தல் அலுவலர் தேர்தல் உதவி அலுவலர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சாலை விபத்தில் உயிரிழந்த செய்தியாளர் அன்பரசுக்கு அரசு மரியாதை



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பட்டினம் பகுதியைச் சேர்ந்த தினகரன் தாலுகா நிருபர் அன்பரசு அவர்கள் சமீபத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் கடுமையாக காயமடைந்து, மூளைச் சாவு அடைந்தார். மனிதநேயத்தை வெளிப் படுத்தும் வகையில், அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப் பட்டன. இந்நிலையில், செய்தியாளர் N. அன்பரசு அவர்களின் உடலுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் (18.03.2026) காலை சுமார் 8.00 மணி அளவில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மரியாதை செலுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் ச. தினேஷ் குமார்,இ.ஆ.ப. அவர்கள் அன்பரசு அவர்களின் உடலுக்கு மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர், மருத்துவமனை கண்காணிப்பாளர், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் செய்தியாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அன்பரசு அவர்களின் தன்னலமற்ற உடல் உறுப்பு தானம் பொதுமக்கள் மத்தியில் பெரும் நெகிழ்ச்சியையும் பாராட்டையும் ஏற்படுத்தியுள்ளது.



வருகின்ற 23.4.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்டம் வேளாளர் மகளிர் கல்லூரி வளாகத்தில் வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் மாணவ, மாணவியர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

## தேர்தல் விழிப்புணர்வு பேரணி ஈரோடு ஆட்சியர் கொடி அசைத்து துவக்கி வைத்தார்




வருகின்ற 23/4/2026 அன்று நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026யை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி, வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை என்ற விழிப்புணர்வு பேரணியை ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி கொடி அசைத்து துவக்கி வைத்தார். மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை ஆணையாளர் சரஸ்வதி, உதவி ஆணையாளர்( மண்டலம்1) மோகனப்பிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் இ எஸ் கல்வியல் கல்லூரி மாணவர்கள் பாண்டிச்சேரி மதகடிப்பட்டு மணக்குள விநாயகர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஒரு நாள் கல்லூரிகளுக்கான விழா நடைபெற்றது. இதில் இ எஸ் கல்வியல் கல்லூரி மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு தங்களின் திறமையும் ஆற்றலையும் வெளிப்படுத்தி பல பரிசுகளை வென்றனர் பரிசு வென்ற மாணவர்களை இ.எஸ் கல்வி குழுமத்தின் தலைவர் செல்வமணி மற்றும் பி எஸ் கல்வியல் கல்லூரி முதல்வர் முனைவர் செந்தில் முருகன் கல்லூரி துணை பேராசிரியர்கள் மாணவர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# ஓசூர் எல்லையில் அதிர்ச்சி சம்பவம் ரூ.2.35 கோடி பணம் பறிமுதல்

தமிழகத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் தேர்தல் விதிமுறைகள் (Model Code of Conduct) தீவிரமாக அமலுக்கு வந்துள்ளன. இதன் ஒரு பகுதியாக, சட்டவிரோதமாக பணம் மற்றும் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க, மாநில எல்லைகளில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழக கர்நாடக எல்லைப்பகுதியாக உள்ள ஓசூர் சுங்கச்சாவடிகளில் பறக்கும் படையினர் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள் 24 மணி நேரமும் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்த சூழலில், இன்று காலை நேரத்தில் ஓசூர் அருகே உள்ள ஜூஜூவாடி சுங்கச்சாவடியில் நடைபெற்ற வாகன தணிக்கையின் போது பெரிய பரபரப்பை ஏற்படுத்தும் சம்பவம் ஒன்று வெளிச்சத்துக்கு வந்தது.

பெங்களூரில் இருந்து ஓசூரை நோக்கி வந்த KA01 AT 628 என்ற எண்ணுடைய சேப்டி ஹிட்டாச்சி கிஜிவி பணம் ஏற்றும் வாகனம் அதிகாரிகளின் சந்தேகத்திற்குள் சிக்கியது. உடனடியாக அந்த வாகனம் நிறுத்தப்பட்டு தீவிரமாக சோதனை மேற்கொள்ளப் பட்டது.

அந்த சோதனையின் போது, வாகனத்தில் இருந்த பணத்திற்கு தேவையான முறையான ஆவணங்கள் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், வாகனத்தில் இருந்து மொத்தம் ரூ.2 கோடி 35 லட்சம் பணம் இருப்பது உறுதியாகியது.

இதையடுத்து, தேர்தல் விதிமுறைகளை மீறி பணம் கொண்டு செல்லப்பட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில், பறக்கும் படையினர் அந்தப் பணத்தை உடனடியாக கைப்பற்றி பாதுகாப்பில் எடுத்தனர். சம்பவம் குறித்து மேலதிக விசாரணை தொடங்கப்பட்டது.

இந்த தகவல் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் . தினேஷ்குமார் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) . தங்கதுரை ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் விரைந்து வந்து நிலைமையை ஆய்வு செய்தனர்.

அவர்கள் சுங்கச்சாவடியில் நடைபெற்று வந்த வாகன சோதனைகளை நேரில் பார்வையிட்டு, அதிகாரிகளுக்கு தேவையான வழிமுறைகளை வழங்கினர். மேலும், சம்பந்தப்பட்ட கிஜிவி வாகனத்தை ஆய்வு செய்து, அதில் கொண்டு செல்லப்பட்ட பணத்திற்கான உரிய மற்றும் சரியான ஆவணங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு வாகன பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தினர்.

ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட்ட பிறகு மட்டுமே பணம் மற்றும் வாகனத்தை விடுவிப்பது குறித்து முடிவு செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஓசூர்–கர்நாடக எல்லைப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், தேர்தல் விதிமுறைகள் எவ்வளவு கடுமையாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது. பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் இடையே இது பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

தொடர்ந்து, தேர்தல் காலம் முழுவதும் இதுபோன்ற சோதனைகள் மேலும் தீவிரப்படுத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

## இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி !

# நோன்பினையும் ஜக்காத்தினையும் நிறைவேற்றிய இஸ்லாமியர்கள் அனைவருக்கும் இக்லாஸ் பள்ளிவாசல்மற்றும் சமூக நல அறக்கட்டளை ரமலான் வாழ்த்து!!!

திருப்பூர் மார்ச்: 19

இது குறித்து 15. வேலம்பாளையம் இக்லாஸ் பள்ளிவாசல். மற்றும் சமூக நல அறக்கட்டளை தலைவர் நிர்வாகிகள்..வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது.



புனித ரமலான் மாதம் என்பது இஸ்லாமியர்களுக்காக ஏக இறைவனான அல்லாஹுதாலா வினால் வழங்கப்பட்ட மிகப் பெரிய வெகுமதியாகும்.

ஆண்டு முழுவதும் ரமலானாகவே இருக்க வேண்டும் என உம்மத்தினர் விரும்புவார்கள். என ஓர் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய சிறப்பு வாய்ந்த மாதம் ரமலான்.

ஆண்டு முழுவதும் நோன்பு நோற்பது சிரமமான காரியம்தான் என்றாலும், புனித ரமலான் மாதத்தில் கிடைக்கின்ற நன்மைகளைக் கருத்தில் கொண்டு மனிதர்கள் அதனை விரும்புவார்கள் என்பதாக

முகமது நபி(ஸல்) அருளியிருக்கின்றார்கள். ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும்ஞ் ஒவ்வொரு மாதமும் மூன்று நோன்புகள் நோற்பதும் உள்ளத்தின் அழுக்குகளையும் , மன ஊசலாட்டங்களையும், நீக்கி விடும் என ஓர் ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நோன்பினுள் பலவிதமான நோக்கங்களும், பலன்களும், இருக்கின்றன. மார்க்கம் நோன்பை விதியாக்கி இருப்பதில் பலவிதமான பலன்கள் மனிதனுக்கு கிடைக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். அவை அனைத்தும் நோன்பில் பசித்திருக்கும் பொழுதுதான் கிடைக்கப் பெறுகின்றன.

அவற்றில் மிகப் பெரிய பலனாகிய மனோ இச்சையை முறியடித்தல் என்பது சிறிது நேரம் பசித்திருப்பதில் அடங்கியிருக்கிறது. ஷைத்தான் மனிதனின் உடலில் ரத்தம் போன்று ஊடுருவி சென்று கொண்டிருக்கிறான். நோன்பு கேடயமாகி ஷைத்தானின் செயல்களில் இருந்து தடுக்கும். நோன்பினால் மற்றொரு பலன் என்னவென்றால் ஏழைகள்போல் பசித்திருந்து அவர்களுடைய நிலைகளை உணர்வதாகும்.

இந்த நோக்கம், மாலை வரை பசி தெரியாமல் இருக்க ஸஹர் நேரத்தில் பால் இனிப்பு வகைகள் ஆகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு குடலை நிரப்பாமல் இருப்பதில்தான் உண்டாக முடியும். ஏழைகளுக்கு ஒப்பாக இருத்தல் என்பது கொஞ்சம் நேரம் பசித்திருப்பதின் மூலமே சாத்தியமாகும். என தலைவர் அப்துல் சமது. செயலாளர் ரபீக். பொருளாளர் சித்திக் மற்றும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## சேலம்,நாமக்கல் தொழிற்சாலைகளில் பாலியல் புகார்களை விசாரிக்க புகார் குழு.

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில் பாலியல் புகார்களை விசாரிக்க உள்ளக புகார் குழு கட்டாயம் அமைக்க வேண்டும் என தொழிலக பாதுகாப்பு இணை இயக்குநர் கலைமதி அறிவித்துள்ளார்.

இது குறித்து சேலம் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத்தின் இணை இயக்குநர் கலைமதி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பணியிடங்களில் இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பெண்களை பாதுகாக்கவும், பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான புகார்களுக்கு தீர்வு காணவும், பாலியல் துன்புறுத்தல் சட்டம்2013 (தடுத்தல், தடை செய்தல் மற்றும் தீர்வு காணுதல்) இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் அனைத்து தொழிற் சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான புகார்களை விசாரிக்க உள்ளக குழு அமைக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களின் வேலையளிப்பவர்களால் உள்ளக புகார் குழு உடனடியாக அமைக்கப்பட வேண்டும் எனவும், இச்சட்டத்தின் வழிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும், தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் உள்ளக குழு அமைக்கப்பட்ட விபரங்கள், அந்தக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் உள்ளிட்ட விவரங்களை www.tnswd-poshicc.tn.gov.in மற்றும் https://shebox.wcd.gov.in/ ஆகிய இணையதளங்களில் உடனே பதிவேற்றம் செய்ய வேண்டும். இந்த சட்டத்தின் கீழ் வேலையளிப்பவருக்காக வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்ற தவறும்பட்சத்தில், அந்த வேலையளிப்பவரின் மீது ரூ.50,000 வரை அபராதம் விதிக்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தென்னாங்கூர் அரசு கலைக் கல்லூரியில் இயற்பியல் மன்ற விழா.!




வந்தவாசி, மார்ச் 19:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இயற்பியல் மன்ற விழா நடைபெற்றது. இயற்பியல் துறை தலைவர்(பொ) முனைவர் பெரியசாமி வரவேற்புரை யாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர்சிதரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக, செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி இயற்பியல் துறை தலைவர் முனைவர் குமார் பங்கேற்று, பட்டப்படிப்பு என்பது வெறும் ஒரு கல்வித் தகுதி மட்டுமல்ல. அது ஒரு மனிதனின் அறிவு, சிந்தனை,மற்றும் வாழ்க்கை நோக்கை மாற்றும் சக்தி கொண்டது.ஒரு மாணவர் பட்டப்படிப்பை முடிக்கும்போது அவர் புத்தக அறிவை மட்டும் பெறுவதில்லை; அதோடு சேர்ந்து ஆராயும் மனப்பான்மை, பிரச்சினைகளை தீர்க்கும் திறன், மற்றும் அறிவியல் சிந்தனை ஆகியவற்றையும் பெறுகிறார். மேலும் இயற்பியல் படித்த மாணவர்கள் கல்வி, ஆராய்ச்சி, பொறியியல், தகவல் தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சி போன்ற பல துறைகளில் வேலைவாய்ப்புகளை பெற முடியும் என உரையாற்றினார். இவ்விழாவில் கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் மனோகரன், வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் மணிமுருகன், ஆங்கில துறைத்தலைவர் சுமதி, உடற்கல்வி இயக்குநர் மற்றும் விலங்கியல் துறை தலைவர் முனைவர் மோகனவள்ளி, தமிழ் துறைத் தலைவர் முதுமுனைவர் எழில் வசந்தன், தா.சுகந்தி உதவிப் பேராசிரியர், உயிர் வேதியியல் துறைத் தலைவர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இயற்பியல் துறை இரா. சேது தொகுப்புரை வழங்கினார். இயற்பியல் துறை ஆ. வேமலா நன்றி கூறினார்.

# புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் குறித்து புமாமமுக அவசர ஆலோசனைக் கூட்டம்



புதுச்சேரி, மார்ச். 19–

புதுச்சேரி சட்ட மன்றத் தேர்தல் குறித்து புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகத்தின் அவசர ஆலோசனைக் கூட்டம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

கழகத்தின் தலைவர் பேராசிரியர் மு இரா மதாஸ் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். கூட்டத்தில் கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் எ. மூ.ராஜன், துணைத் தலைவர் நித்தியானந்தம், மாநிலச் செயலாளர்கள் ரவிக்குமார் மோகன சுந்தரம் ,பரந்தாமன் தொகுதிப் பொறுப் பாளர்கள் காலாப்பட்டு குமார், நெல்லித்தோப்பு டில்லி பாபு, ஏம்பலம் முருகையன் ,அரியாங் குப்பம் தனஞ்செயன், மீனவர் அணித் தலைவர் இதய சந்திரன், ஆனந்தன் , கலியபெருமாள், அபிலாஷ் மற்றும் மாநில நிர்வாகிகள் தொகுதிப் பொறுப்பாளர்கள் அணித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

புதுவை மாநில சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தலில் நிற்பது பற்றிய பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

ஒரு பிரிவினர் தேர்தலில் நின்று நம் சக்தியை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்றும், மற்றொரு பிரிவினர் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்துக்கு சென்றுள்ள நமது கழகம் அதன் தீர்ப்பு வரும் வரை காத்திருக்க வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தலில் நாம் முதன்முதலாக பங்கேற்க வேண்டும் என்ற கொள்கையை பிடிப்புடன் இருந்த காரணத்தால் உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதில் நின்று நம் பலத்தைக் காட்டி விட்டு சட்டமன்றத் தேர்தல் நிற்க வேண்டும் என்றும் அழுத்தமாகத் தங்கள் கருத்து வெளியிட்டனர்.

நீண்ட விவாதத்துக்கு பிறகு இன்னும் சில தினங்களில் இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்றும். அந்த முடிவை தனியாக நடத்தப்படும் பத்திரிகையாளர் சந்திப்பு கூட்டத்தில் கழகத்தின் தலைவர் பேராசிரியர் மு ராமதாஸ் அறிவிப்பார் எனவும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# நோன்பினையும் ஜக்காத்தினையும் நிறைவேற்றிய இஸ்லாமியர்கள் அனைவருக்கும் காயல் அப்பாஸ் ரமலான் வாழ்த்து !



காயல் பட்டிணம் மார்ச்: 19

இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தில் கூறியிருப்பதாவது.

புனித ரமலான் மாதம் என்பது இஸ்லாமியர்களுக்காக ஏக இறைவனான அல்லாஹுதாலாவினால் வழங்கப்பட்ட மிகப் பெரிய வெகுமதியாகும்.

ஆண்டு முழுவதும் ரமலானாகவே இருக்க வேண்டும் என உம்மத்தினர் விரும்புவார்கள் என ஓர் ஹதீஸில் குறிப்பிடப்பட் டுள்ளது. அத்தகைய சிறப்பு வாய்ந்த மாதம் ரமலான்.

ஆண்டு முழுவதும் நோன்பு நோற்பது சிரமமான காரியம்தான் என்றாலும், புனித ரமலான் மாதத்தில் கிடைக்கின்ற நன்மைகளைக் கருத்தில் கொண்டு மனிதர்கள் அதனை விரும்புவார்கள் என்பதாக முகமது நபி(ஸல்) அவர்கள் அருளியிருக்கின்றார்கள். ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும்ஞ் ஒவ்வொரு மாதமும் மூன்று நோன்புகள் நோற்பதும் உள்ளத்தின் அழுக்குகளையும் , மன ஊசலாட்டங்களையும், நீக்கி விடும் என ஓர் ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நோன்பினுள் பலவிதமான நோக்கங்களும், பலன்களும், இருக்கின்றன. மார்க்கம் நோன்பை விதியாக்கி இருப்பதில் பலவிதமான பலன்கள் மனிதனுக்கு கிடைக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். அவை அனைத்தும் நோன்பில் பசித்திருக்கும் பொழுதுதான் கிடைக்கப் பெறுகின்றன.

அவற்றில் மிகப் பெரிய பலனாகிய மனோ இச்சயை முறியடித்தல் என்பது சிறிது நேரம் பசித்திருப்பதில் அடங்கியிருக்கிறது. ஷைத்தான் மனிதனின் உடலில் ரத்தம் போன்று ஊடுருவி சென்று கொண்டிருக்கிறான். நோன்பு கேடயமாகி ஷைத்தானின் செயல்களில் இருந்து தடுக்கும். நோன்பினால் மற்றொரு பலன் என்னவென்றால் ஏழைகள்போல் பசித்திருந்து அவர்களுடைய நிலைகளை உணர்வதாகும்.

இந்த நோக்கம், மாலை வரை பசி தெரியாமல் இருக்க ஸஹர் நேரத்தில் பால் இனிப்பு வகைகள் ஆகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு குடலை நிரப்பாமல் இருப்பதில்தான் உண்டாக முடியும். ஏழைகளுக்கு ஒப்பாக இருத்தல் என்பது கொஞ்சம் நேரம் பசித்திருப்பதின் மூலமே சாத்தியமாகும்.

ஆகவே, இந்த புனிதமான ரமலான் மாதத்தில் மார்க்கத்தைக் கொண்டு நாம் நோற்ற இந்த நோன்பினையும் ஜக்காத்தினையும் நிறைவேற்றிய இஸ்லாமியர்கள் அனைவருக்கும் இனிய ரமலான் நல் வாழ்த்துகளை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# அதிமுக வேட்பாளர் வெற்றிக்கு உதவும் திமுக அமைச்சர் ஏ வ வேலு



அமைச்சர் எ.வ வேலு பிறந்தநாள் அன்று வேலூர் எம் எல் ஏ கார்த்திகேயன் எ.வ வேலுவை தனது ஆதரவாளர்களுடன் சென்று பார்த்து மரியாதை செலுத்தி அவர் காலில் விழுந்து மீண்டும் வேலூர் தொகுதியில் மூன்றாவது முறையாக நீங்கள் தான் எனக்கு வாய்ப்பு பெற்று தரவேண்டும் என கேட்டதாகவும் அதற்கு எ.வ வேலு உனக்கு எதிராக உளவுத்துறை முதல்வர் ஸ்டாலின் வசம் அறிக்கையாக கொடுத்துள்ளது. என்றாலும் நீ என்மீது அன்பு கொண்டவன் என்பதால் எப்படியாவது நமது தலைமையில் போராடி வாய்ப்பு பெற்று தருகிறேன் நீ தேர்தல் வேலையை துவங்கு உனக்கு எதிரானவர்களை சரிக்கட்டு என்று அனுப்பிவைத்தாராம் எ.வ வேலு இதில் பூரிப்புடன் கார்த்திகேயன் இருப்பதாக அவரது ஆதரவாளர்கள் கூறி வருவதாகவும் இத்தகவல் தெரிந்த அ.தி.மு.க மாநகர மாவட்ட செயலாளர் எஸ் ஆர் கே அப்பு மீண்டும் தி.முக.வில் கார்த்திகேயனுக்கு வாய்ப்பு அளித்தால் எனக்கு வெற்றி உறுதி என கூறுவதாகவும் இத்தகவல் தெரிந்த உடன்பிறப்புகள் பலர் வேலூர் தி.மு.க கோட்டையாக உள்ளது கார்த்திகேயனுக்கு மீண்டும் வாய்ப்பு அளித்தால் வேலூர் தொகுதியை கோட்டை விடவேண்டியது தான் என புலம்பி வருவதாக தகவல்

# காரமடை ரோட்டரி சங்கம் சார்பில் அரசு கலை அறிவியல் கல்லூரியில் இரத்ததான முகாம்!!!




கோவை மார்ச்:19

கோவை மாவட்டம் காரமடை அருகே குட்டையூர் பகுதியில் உள்ள அரசு கலை அறிவியல் கல்லூரியில் காரமடை ரோட்டரி சங்கம்,மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை இரத்த வங்கி, யூத் ரெட் கிராஸ் சொசைட்டி மற்றும் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் ஆகியவை இணைந்து இரத்ததானம் வழங்கும் முகாமை நடத்தினார்கள். இம்முகாம் ரோட்டரி சங்கத் தலைவர் குமணன் நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்த சிறப்பு முகாமில் கல்லூரியில் பயிலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தார்கள். அம்மாணவர்களை ரோட்டரி சங்க தலைவர் மற்றும் நிர்வாகிகள், கல்லூரி முதல்வர் ஆகியோர் சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்தி பேசினார்கள்.

இம்முகாமில் இரத்த தானம் செய்வதனால் சமூகத்திற்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், இதன் மூலம் பல்வேறு மனித உயிர்கள் காப்பாற்ற உதவ முடியும் என்ற விழிப்புணர்வை மாணவர்களிடையே எடுத்துரைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் உடன் ரோட்டரி சங்க மண்டல ஒருங்கிணைப்பாளர் சிவ சதீஷ்குமார், நிர்வாகிகள் செந்தில் குமார், தீபக், தினகரன், கல்லூரி முதல்வர் க.ஆ.ஜெய சங்கர், கல்லூரி ஒய்.ஆர்.சி. பொறுப்பாளர் பாண்டியராஜன், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவர் ராம் தீபிகா ஆகியோர் இருந்தனர்.

# 2050க்குள் புதுமையான புதுச்சேரி ஷ காமராஜ் நகர் தொகுதியில் வீடு வீடாக வாக்கு சேகரித்தார் ஜோஸ் சார்லஸ் மார்டின்..





2050 ஆம் ஆண்டுக்குள் புதுமையான புதுச்சேரியை உருவாக்குவோம் என்ற இலக்குடன், அடுத்த கட்ட வளர்ச்சிக்கான முத்தான பத்து திட்டங்களை முன்வைத்து லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்கள் காமராஜ் நகர் தொகுதிக்கு உட்பட்ட சாமிப்பிள்ளை தோட்டம் அன்னை இந்திரா நகர், விஷ்ணு நகர், ராஜீவ் காந்தி நகர், வாஞ்சி நாதன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார்.

காமராஜ் நகர் தொகுதியில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வரும் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மகளிர் மலர்கள் தூவி அவரை வரவேற்று ஆதரவை வெளிப்படுத்தினர்.

அப்போது, "உங்களை பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்" என்று பொதுமக்கள் உறுதியளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கட்சியின் பொதுச் செயலாளர் சுரேஷ், பரப்புரை செயலாளர் நடிகர் தாடி பாலாஜி, தொண்டர் அணி தலைவர் மதன், இளைஞர் அணி துணை தலைவர் ஜாகிர் உசேன், விஷ்ணு, மூத்த உறுப்பினர் பாலு, மாங்குடி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்டத்தில் என்எம்எம்எஸ் தேர்வில் 355 மாணவர்கள் தேர்வு.

சேலம் மாவட்டத்தில் என்எம்எம்எஸ் தேர்வு எழுதிய 355 மாணவ,மாணவிகள் உதவித்தொகைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் 8ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை (என்எம்எம்எஸ்) தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வில் வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ஆண்டிற்கு ரூ.12,000 என மொத்தம் ரூ.48 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும். அதன்படி, நடப்பு 20252026ம் கல்வியாண்டிற்கான தேர்வு கடந்த ஜனவரி 10ம் தேதி நடந்தது. சேலம் மாவட்டத்தை பொறுத்தவரை மாணவர்கள் 3,651 பேர், மாணவிகள் 5,241 பேர் என மொத்தம் 8,892 பேர் இத்தேர்வுக்காக விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்காக மாவட்டம் முழுவதும் 44 மையங்கள் ஏற்படுத்தப்பட்டு தேர்வு நடந்தது.

இதில் 8,752 மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு தேர்வெழுதினர். இதனிடையே தேர்வு முடிவுகள் ஏற்கனவே வெளியான நிலையில், உதவித்தொகைக்கு தகுதிவாய்ந்த மாணவர்கள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி சேலம் மாவட்டத்தை சேர்ந்த 355 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சேலம் மாவட்டத்தில் அதிகபட்சமாக ஜலகண்டாபுரம் அரசுப்பள்ளி மாணவிகள் 24 பேர் தேர்வாகியுள்ளனர். இதற்கு அடுத்தபடியாக நங்கவள்ளி மகளிர் பள்ளி மற்றும் நெத்திமேடு ஜெயராணி மகளிர் பள்ளி மாணவிகள் தலா 14 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து தேர்வான மாணவர்களுக்கு கல்வித்துறை அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.





சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப்இந்தியாகம்யூனிஸ்ட் கட்சி சார்பாக காமராஜ் நகர் தொகுதியில் கட்சியின் மாநில செயலாளர் வழக்கறிஞர் லெனின்துரை வேட்பாளராக போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து தேர்தல் பணி குழு கூட்டம் மார்ச் 17 செவ்வாய்க்கிழமை அன்று கட்சியின் மாநில குழு உறுப்பினர் தோழர் முத்து தலைமையில் நடைபெற்றது. கவிஞர் தமிழ் ஒளிகல்வி வட்ட ஒருங்கிணைப்பாளர் வரவேற்புரை ஆற்றினார். Aiutuc மாநில செயலாளர் சிவகுமார் ரெயின்போ நகர் நலவாழ்வு சங்கத்தின் தலைவர் சண்முகம் வழக்கறிஞர் ரத்தினம் வழக்கறிஞர் சந்திரமோகன் கவிஞர் குமரவேலு தவமணி நகர் குடியிருப்போர் நலவாழ் சங்கத்தின் தலைவர் ரகுபதி சாமி பிள்ளை தோட்டம் காமராஜர் இளைஞர் நற்பணி மன்றத்தின் தலைவர் ரவி அணைக்கரை மேடு மணிமாறன் வழக்கறிஞர் ஆறுமுகம் சங்கரதாஸ் நகர் கணேஷ் தொழிலதிபர் கந்தசாமி சத்யா சாமிக்கண்ணு ஆட்டோ சங்கத் தலைவர் ராபர்ட் நடைபாதை வியாபாரி சங்கத் தலைவர் சீனு அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்க தலைவர் சுதாகர் சமூக ஆர்வலர் மலர்வாணி மாணவர் சங்க தலைவர் திவ்யா சட்டக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். வேட்பாளர் வழக்கறிஞர் லெனின் துரை நிறைவுரை ஆற்றினார் . வேட்பாளர் லெனின் துரை அவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அன்று ஊர்வலமாக சென்று வேட்பு மனுதாக்கல் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இச்செய்தியை தங்கள் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சியில் வெளியிடுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறோம்



புதுச்சேரி நேயம் மக்கள் கழகம் சார்பாக உருளையன்பேட்டை தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் உருளையன்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் நேயம் மக்கள் கழக தலைவருமான G.நேரு(எ)குப்புசாமி MLA அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேலும் ஆலோசனை கூட்டத்தில் நேயம் மக்கள் கழகத்தை சேர்ந்த நிர்வாகிகளும், பிரமுகர்களும், மகளிர்களும், இளைஞர்களும் தங்களது ஆலோசனைகளை வழங்கினார்கள்.... மேலும் ஆலோசனைக் கூட்டத்தில் உருளையன்பேட்டை பேட்டை தொகுதியை சேர்ந்த நேயம் மக்கள் கழக நிர்வாகிகளும், பிரமுகர்களும், மகளிர்களும், இளைஞர்களும் பலர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்...

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!!!



கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள்,சட்ட ஒழுங்கு சீர்கேடுகள்,போதைப்பொருட்கள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவறிய திமுக அரசை கண்டித்து தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில்,அதிமுக சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான, எஸ் பி வேலுமணி பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, முன்னாள் அமைச்சர்கள்,சட்டமன்ற உறுப்பினர்கள்,தோழமை கட்சி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடக கண்காணிப்பு மையத்தின் செயல்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்த் நடைபெற உள்ளதை முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சிராப்பள்ளி மேலப்புதூர் பிஷப் ஹைமன் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை அறிவுறுத்திடும் வகையில் விழிப்புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி ஏற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# செஞ்சி, மைலம், திண்டிவனம்தொகுதியில் மிகப்பெரிய வெற்றிக்கு நிர்வாகிகள் கடுமையாக உழைக்க வேண்டும்

## விழுப்புரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ அறிவுறுத்தல்




விழுப்புரம். மார்ச்.19–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனை திட்டங்களை வாக்காளர்களிடம் கூறி செஞ்சி, மைலம், திண்டிவனம்தொகுதியில் மிகப்பெரிய வெற்றிக்கு நிர்வாகிகள் கடுமையாக உழைக்க வேண்டும் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏஅறிவுறுத்தினார்

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசரசெயற்குழு ஆலோசனை கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்குமாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமை தாங்கினார். மைலம் தொகுதி பார்வையாளர் கடலூர் இள. புகழேந்தி,மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனிராஜ்,மாவட்ட பொருளாளர் ரமணன்,ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு உறுப்பினர் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்குமாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில்மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் அனைத்து மாவட்ட செயலாளர்களுடன் கூட்டம் நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார். முதலமைச்சரின் வழிகாட்டுதல்படி விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகியசட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணியாற்றுவது தொடர்பாகவும், கூட்டணி கட்சியினரை ஒருங்கிணைப்பது, பிரச்சாரங்களை மேற்கொள்வது, திமுக அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடாக எடுத்துச் சென்று மக்களிடையே விளக்கி வாக்கு சேகரிக்க வேண்டும் நமக்கு மிகப்பெரிய பக்கபலமே மகளிர்கள் தான் அந்த வகையில் மகளிர்களுக்கு கழகத் தலைவர்கொண்டு வந்துள்ள சாதனைகளான மகளிர் விடியல் பயணம் ,கலை ஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப் பெண், மகளிர் சுய உதவி குழுவிற்கு கடன் உதவி போன்ற பொருளாதார ரீதியிலான பல்வேறு திட்டங்களை அறிவித்து முதலமைச்சர் செயல்படுத்தி உள்ளார். அது மட்டும் இல்லாமல் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் ஐந்தாயிரமும், தற்போது மாற்றுத்திறனாளிகள் ,முதியோர் உதவித்தொகை பெறுபவர்களுக்கு 2000. அறிவித்துள்ளார். இது போன்ற அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி இருக்கிறார்.மேலும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில்மகளிர் உரிமைத் தொகை 2000 ஆக வழங்கப்படும் கூறியுள்ள முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் மேலும் பல திட்டங்களையும் செயல்படுத்த உள்ளதாக தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் திட்டங்களையும் முதலமைச்சர் தெரிவித்துள்ள வாக்குறுதிகளை மக்களிடம் கொண்டு சேர்த்து செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் திமுக வெற்றிக்கு அனைத்து நிர்வாகிகள், கழகத்தினர்கள் கடுமையாக உழைத்து தீவிரமாக தேர்தல் பணியாற்ற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடூர் ரவி,சாந்தி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராமன், அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி,மணிமாறன், செழியன், விஜயராகவன், பச்சையப்பன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன்,சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், அனந்தபுரம் பேரூர் தலைவர் முருகன், செஞ்சி துணைச் சேர்மன் ஜெயபாலன், அணி அமைப்பாளர்கள் ,பிரசன்னா, திலகவதி, ராஜசக்தி, கே அன்சாரி ,திருமலை, எஸ். விஜயராகவன், சிவகாமி, தமிழரசன், ரோமியன் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றியநகர பேரூராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

# திருச்சி தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை சார்பாக கன்டோன்மென்ட்ல் கண் நீர் அழுத்த நோய் பற்றிய விழிப்புணர்வு




திருச்சி. மார்ச் 19

மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் உலக கண்ணீர் அழுத்த விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப்பட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம் அதன் தொடர்ச்சியாக திருச்சி தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை சார்பாக கன்டோன்மென்ட்ல் கண்ணீர் நீர் அழுத்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

குளுக்கோமா (கண் நீர் அழுத்த நோய்) உலகளவில் மக்களிடம் சரிசெய்ய முடியாத பார்வை இழப்பிற்கு மிக முக்கியமான காரணமாக விளங்குகிறது. குளுக்கோமா பார்வையை மெதுவாக குறைய செய்யும், பெரும்பாலான மக்களுக்கு அந்த நோயால் எந்த அறிகுறிகளும் இருப்பதில்லை எனவே, சிறிது சிறிதாக பார்வை இழப்பு ஏற்படுகிறது. 40 வயதிற்கு மேற்பட்ட இந்திய மக்களின் 3% முதல் 5% வரை மக்களுக்கு குளுக்கோமா நோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. வருந்தத்தக்க விஷயம் யாதெனில் இதில் 50% மக்கள் மட்டுமே கண் பரிசோதனை செய்து கொள்கின்றனர். 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் கிட்ட பார்வை (High Myopia), சர்க்கரை நோய், கண்ணில் காயம், தொடர்ச்சியாக ஸ்டீராய்டு மருந்துகள் பயன்படுத்துவோர், மற்றும் குடும்பத்தில் ரத்த வழி உறவினர்களுக்கு குளுக்கோமா நோய் இருப்பது, ஆகியோர்களுக்கு குளுக்கோமா வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலக குளுக்கோமா வாரம் ஆக மார்ச் இரண்டாம் வாரம் உலக அளவில் அனுசரிக்கப்படுகிறது. இந்த வருடம் அனைவரும் இணைந்து செயல்பட்டு இந்நோய் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் சென்றடைய வேண்டும், கண் பரிசோதனை செய்து கொள்வதன் அவசியம் மக்கள் அனைவரும் அறிய வேண்டும்.

குளுக்கோமாவுக்கான சிகிச்சை முறைகள் : கண் சொட்டு மருந்து, லேசர் மற்றும் அறுவை சிகிச்சை ஆகும். Trabeculectomy மற்றும் (MIGS) ஆகியன நவீன அறுவை சிகிச்சை முறைகள் ஆகும். எங்கள் சாதனைகளின் சிறப்பம்சங்களில் ஒன்று. கண் அழுத்தத்தாலும் கண்புரையாலும் பாதிக்கப்பட்ட 106 வயது முதியவருக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் விளைவாக, தற்போது அவர் தனது தேவைகளைத் தாமாகவே கவனித்துக் கொள்ளும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளார்.2012ல் இந்தியா மற்றும் சீனாவில் 100 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு அறுவை சிகிச்சை செய்த சாதனை பதியப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, 2026ல் திருச்சியில் உள்ள 'தி ஐ ஃபவுண்டேஷன்' (The Eye Foundation) இந்த சாதனையை படைத்துள்ளது."

குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு மார்ச் 14 முதல் ஏப்ரல் 14 வரை (ஒரு மாதம்) எங்களது அனைத்து கிளைகளிலும் குளுக்கோமா நோய்க்கான இலவசமான கண் பரிசோதனை வழங்கப்படும் மேலும் அறுவை சிகிச்சை செய்து கொள்வோருக்கு கட்டணத்தில் 10% சலுகைகள் வழங்கப்படும். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தி ஐ ஃபவுண்டேசன் கண் மருத்துவமனை அனைத்து ஊர்களிலும் இலவச கண் பரிசோதனை முகாம்களும் நடைபெறுகிறது. இந்தப் பேரணிக்கு அரிமா முகம்மது ஷபி, மாவட்டத் தலைவர், சாசனத்தலைவர், திருச்சிராப்பள்ளி ராயல் லயன்ஸ் சங்கம். அரிமா சரவணன் தலைவர் திருச்சிராப்பள்ளி ராயல் லயன்ஸ் சங்கம் ஆகியோர் கொடி அசைத்து பேரணியை துவைகினர். தலைமை மருத்துவர் டாக்டர். அர்ச்சனா தெரேசா அவர்கள் கண்ணீர் அழுத்த நோய் பற்றிய விழிப்புணர்வு உரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் கே ராமகிருஷ்ணா காலேஜ் மாணவர்கள், லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள் மற்றும் தி ஐ பவுண்டேஷன் ஊழியர்கள் கலந்து கொண்டனர். பொது மேலாளர் லோகநாதன் வரவேற்புரை வழங்கினார். மக்கள் தொடர்பு அதிகாரி மேலாளர் லூமன், செந்தில் குமார் மற்றும் மக்கள் தொடர்பு குழுவினர் இணைந்து நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினர். இறுதியில் கிளை மேலாளர் திருமதி. ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

# புதுச்சேரி அரியாங்குப்பம் தொகுதியில் '10 ரூபாய் சட்ட இயக்கம்' ரகு வேட்புமனு தாக்கல்: பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி உற்சாகம்!



புதுச்சேரி: மார்ச்.19–

புதுச்சேரி அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில்செயல்பட்டுவரும் '10ரூபாய்சட்ட இயக்கத்தின்' நிறுவனர் ரகு, தனது வேட்புமனு வைத் தாக்கல் செய்தார்.

புதுச்சேரி தட்டாஞ் சாவடியில் உள்ள தேர்தல் நடத்தும் அலு வலர் அலுவலகத்தில், அரியாங்குப்பம்சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்கான தனது வேட்புமனுவை ரகு அதிகாரப்பூர்வமாக சமர்ப்பித்தார். மனுத் தாக்கலை முடித்துவிட்டு வெளியே வந்த அவர், அங்கு திரண்டிருந்த பொதுமக்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இனிப்புகளைவழங்கிதனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர் களிடம் பேசிய ரகு கூறியதாவது:

"அரியாங்குப்பம்தொகுதி மக்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். இந்தத் தேர்தலில் நான் வெற்றி பெற்று மக்கள் பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்பட்டால், அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முன்னுரிமை அளிப்பேன். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்காக அனைத்துவிதமான மக்கள்நலத்திட்டங்களையும் தொகுதிக்குக் கொண்டு வருவேன்."

மேலும்,அரியாங்குப்பம் தொகுதி மக்கள் தனக்கு முழுமையான ஆதரவை வழங்கி, ஒரு மாற்றத்தை உருவாக்குவார்கள் என்று தான் உறுதியாக நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

# தமிழகம், புதுச்சேரியில் ஒரே நாளில் தேர்தல் நடத்துங்கள்: தேர்தல் ஆணையத்துக்கு திமுக கடிதம்

புதுச்சேரி: மார்ச்.19–

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை தமிழகத்துடன் இணைத்து நடத்தக்கோரி தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு திமுக கடிதம் அனுப்பியுள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி திமுக மாநில அமைப்பாளர்சிவா அனுப்பிய கடிதம்: வரலாற்று ரீதியாக, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பொதுத் தேர்தல்கள் பெரும்பாலும் ஒரே நாளில் நடத்தப் பட்டு வந்துள்ளன. இந்த அணுகு முறையிலிருந்து விலகுவதற்கான காரணங்களை கூற வேண்டும். தற்போதைய புதுச்சேரி சட்டப்பேரவை பதவிக்காலம் வரும் ஜூன் 15 வரை நீடிக்கும். இப்படியிருக்க, தேர்தல் அட்டவணையை முன்கூட்டியே நடத்துவதில் உள்ள அவசரம் குறித்து தெரிவிக்க வேண்டும்.

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில், 28 தொகுதிகள் புவியியல் ரீதியாகத் தமிழ் நாட்டுக்குள் அமைந்துள்ளன. இத்தகைய சூழ்நிலைகளில், இரண்டு வெவ்வேறு தேதிகளில் வாக்குப்பதிவை நடத்துவது, பிரச்சாரம் என்ற போர்வையில் வெளியாட்கள் நடமாடுவது, வாக்காளர் ஆள்மாறாட்ட அபாயங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் உள்ளிட்ட சவால்களை உருவாக்கக் கூடும்.

புதுச்சேரிக்கு தமிழ்நாட்டின் வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23ல் இணைத்து நடத்த வேண்டும். தமிழகத்தில் வேலை நாளாக வரும் ஏப்.9ம் தேதி புதுச்சேரி வாக்குப்பதிவை நடத்தினால், இங்கிருந்து தமிழகத்தில் பணி புரிவோருக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பை உறுதி செய்ய வேண்டும்.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்யப் போதுமான கால அவகாசம் தேவைப்படுகிறது. அதனால் வேட்பு மனு செயல் முறைக்கு நியாயமான கால அட்டவணையை தரவேண்டும்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421